# திருவாய்மொழி 1-7 - பிறவித்துயர்
## (எம்பெருமானைப் பற்றுவது மிக இனிதாய் இருக்கும் எனல்)

2741 * பிறவித் துயரற * ஞானத்துள் நின்று *
துறவிச் சுடர் விளக்கம் * தலைப்பெய்வார் **
அறவனை * ஆழிப்படை அந்தணனை *
மறவியை இன்றி * மனத்து வைப்பாரே 1

2742 வைப்பாம் மருந்தாம் * அடியரை * வல்வினைத்
துப்பாம் புலன் ஐந்தும் * துஞ்சக் கொடான் அவன் **
எப்பால் யவர்க்கும்[1] * நலத்தால் உயர்ந்துயர்ந்து *
அப்பால் அவன் * எங்கள் ஆயர் கொழுந்தே 2

2743 ஆயர் கொழுந்தாய் * அவரால் புடையுண்ணும் *
மாயப் பிரானை * என் மாணிக்கச் சோதியை **
தூய அமுதைப் * பருகிப் பருகி * என்
மாயப் பிறவி * மயர்வு அறுத்தேனே 3

2744 மயர்வற என் மனத்தே * மன்னினான் தன்னை *
உயர்வினையே தரும் * ஒண்சுடர்க் கற்றையை **
அயர்வில் அமரர்கள் * ஆதிக் கொழுந்தை * என்
இசைவினை * என் சொல்லி யான் விடுவேனோ? 4

2745 விடுவேனோ? என் விளக்கை * என் ஆவியை *
நடுவே வந்து * உய்யக் கொள்கின்ற நாதனை **
தொடுவே செய்து * இளவாய்ச்சியர் கண்ணினுள் *
விடவே செய்து * விழிக்கும் பிரானையே 5

2746 பிரான் * பெருநிலம் கீண்டவன் * பின்னும்
விராய் மலர்த்துழாய் * வேய்ந்த முடியன் **
மராமரம் * எய்த மாயவன் * என்னுள்
இரான் எனில் * பின்னை யானொட்டுவேனோ? 6

2747 யானொட்டி என்னுள் * இருத்துவம் என்றிலன் *
தானொட்டி வந்து * என் தனி நெஞ்சை வஞ்சித்து **
ஊனொட்டி நின்று * என் உயிரில் கலந்து * இயல்
வானொட்டுமோ? * இனி என்னை நெகிழ்க்கவே 7

2748 என்னை நெகிழ்க்கிலும் * என்னுடை நல்நெஞ்சன்
தன்னை * அகல்விக்கத் * தானும் கில்லான் இனி **
பின்னை நெடும் பணைத் தோள் * மகிழ் பீடுடை *

[1] எவர்க்கும்

முன்னை அமரர் * முழுமுதலானே[2] 8

2749 அமரர் முழுமுதல் * ஆகிய ஆதியை *
அமரர்க்கு அமுதீந்த * ஆயர் கொழுந்தை **
அமரவழும்பத் * துழாவி என்னாவி *
அமரத் தழுவிற்று * இனி அகலுமோ? 9

2750 அகலில் அகலும் * அணுகில் அணுகும் *
புகலும் அரியன் * பொருவல்லன் எம்மான் **
நிகரில் அவன் புகழ் * பாடி இளைப்பிலம் *
பகலும் இரவும் * படிந்து குடைந்தே 10

2751 * குடைந்து வண்டுண்ணும் * துழாய் முடியானை *
அடைந்த தென்குருகூர்ச் * சடகோபன் **
மிடைந்த சொல் தொடை * ஆயிரத்து இப்பத்து *
உடைந்து நோய்களை * ஓடுவிக்குமே 11

**அடிவரவு:** பிறவி வைப்பாம் ஆயர் மயர்வற விடுவேன் பிரான் யானொட்டி
என்னை அமரர் அகலில் குடைந்து ஓடும்

[2] முழுமுதல்தானே